[13th March 1961]

(*b*) the amount of subsidy given to each unit; and

(*c*) the manner in which the trainees are selected?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) *to* (*c*) The answer [a] is placed on the table of the House.

Pig iron

***782 *Q.*—SRI A. VEDARATHNAM:** *கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) 1960-ம் ௵ ஆகஸ்டு ௴ 19-ம் தேதியன்று கனம் அமைச்சர் அவர்கள் 290-வது எண்ணுள்ள கேள்விக்களித்த பதிலையொட்டி, வார்ப்பு இரும்புக்கு (Pig-iron) *தற்சமயம் விலை கட்டுப்பாடு இருக்கிறதா ?*

(இ) அப்படியானால், என்ன விலை ?

(உ) இல்லையானால் எப்போதிருந்து அதற்கு விலை கட்டுப்பாடு இல்லை ?

(எ) கட்டுப்பாடு நீக்கியபின் வார்ப்பு இரும்பின் விலை ஏறி இருக்கிறதா ? எவ்வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) There is statutory price control over pig-iron. The prices of all grades of pig-iron have been fixed by the Iron and Steel Controller, Calcutta.

(*b*) A copy [b] of the Schedule containing the prices of all grades of pig-iron together with the "Extras and penalties" in respect of variation from standard grades is placed on the table of the House.

(*c*) & (*d*) Do not arise.

SRI A. VEDAMATHNAM : *ஸார், இரும்புக்கு விலைக் கட்டுப்பாடு நீக்கிய பிறகு . . . ,*

THE HON. SRI R. VENKATARAMAN : *நீக்க வில்லை.*

SRI A. VEDARATHNAM : *வார்ப்பு இரும்பின் விலை ஏறியிருக்கிறதே, அதற்குக் காரணம் என்ன ?*

THE HON. SRI R. VENKATARAMAN : *கனம் அங்கத்தினர் இங்கே "பிக் ஐர்ன்" என்று கேட்டிருக்கிறார்; பிக் ஐர்னுக்கு விலைக் கட்டுப்பாடு ரத்து செய்யவில்லை. "வார்ப்பு ஐர்ன்"* **is 'wrought iron', I think.**

SRI A. VEDARATHNAM : *வார்ப்பு இரும்புக்கு விலைக் கட்டுப்பாடு உண்டா ? விலை ஏறியிருப்பதற்குக் காரணம் என்ன ? கட்டுப்பாட்டை நீக்கிய பிறகு விலை ஏறியிருக்கிறதே !*

THE HON. SRI R. VENKATARAMAN : *"வார்ப்பு இரும்பு" என்ன என்பது தெரியவில்லை. அதன் இங்கிலீஷ் ஈக்விவலண்ட் சொன்னால், பதில் சொல்ல முடியும்.*

---

a Printed as Appendix II on page 326 infra.

b Printed as Appendix III on pages 327–328 infra.

13th March 1961]

MR. SPEAKER: யோசனை செய்து இன்னொரு கேள்வி கொடுங்கள்.

State Transport

* 783 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மாநில பஸ் போக்கு வரத்து ஆலோசனைக் குழுவில் என்னென்ன ஆலோசனைகள் கூறப்பட்டன ?

(இ) அதையொட்டி சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH: (அ) & (இ) A statement is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : ஸார், ரேடியோ வியாபாரிகள் பஸ்களில் ரேடியோ வைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்களே. அப்படி வைக்காவிட்டாலும் அதிக தூரம் செல்லும் பஸ்களில், அவை ஆங்காங்கே நிற்கும் இடங்களிலாவது வைக்க முன்வருவார்களா ?

THE HON. SRI V. RAMIAH : அப்படி உத்தேசம் இல்லை.

SRI S. M. ANNAMALAI: சிபாரிசுகளிலே அதைக் கவனிக்க முடியவில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதைக் குறித்துத்தான் கேள்வி போட்டேன். பஸ் ஓடும்போது வைக்காவிட்டாலும், அவை நிற்கும் இடங்களில், பிரயாணிகள் சாப்பாட்டுக்குப்போகும் நேரங்களில், ரேடியோவை வைக்க ஏன் சர்க்கார் பரிசீலிக்கக் கூடாது ?

THE HON. SRI V. RAMIAH : கனம் அங்கத்தினர் ஆலோசனையை பட்ஜட் விவாதத்தின் போது சொன்னால், அதற்கான பதிலைச் சொல்லுகிறேன்.

SRI K. VINAYAKAM : Sir, from the statement placed on the table of the House, in regard to item 5, the Director of State Transport has advised the Government that radio-receiving sets can be installed in buses plying for short distances, say 8 miles. So, what action the Government have taken at least with regard to buses owned by the Transport Department and which are plying within 8 miles in the Madras City, to places like St. Thomas Mount and Pallavaram?

THE HON. SRI V. RAMAIAH : I wish the hon. Member reads the second part of the answer also. We have been considering this matter for quite a long time. This matter had again been placed before the State Transport Advisory Committee and the Advisory Committee had also come to the conclusion that it would

* Printed as Appendix IV on pages 329–333 infra.